**கவனிக்க.-** *2008.07.04 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1558 - 2008 ජුලි 11 වැනි සිකුරාදා - 2008.07.11

*1558 ஆம் இலக்கம் – 2008 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 698 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 699 |


***வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான***

***முக்கிய அறிவித்தல்கள்***

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் ஒவ்வொரு பகுதியினதும் ஒவ்வொரு தொகுதியின் இறுதியிலும் ஒவ்வொரு மாதத்தின் முதல் வார வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் வாராந்த வர்த்தமானியிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் தேதிகள், நேரங்கள் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதியிலும் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசி நாள்* ***வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் தேதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணியாகும்.*** *வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்களுக்கும் கேள்விப்பத்திரங்களுக்கும் கடைசித் தேதியும் நேரமும், ஏலவிற்பனைக்குத் தேதியும் நேரமும் குறிக்கும் அறிவித்தல்கள் தயாரிக்கப்படும்போது மேற்கண்ட மாற்றத்துக்குக் கவனஞ் செலுத்துமாறும், பிரசுரமாகும் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறையுள்ளவர்கள் ஆக்கபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் பங்குகொள்வதற்கியலும் வகையில் அறிவித்தல்கள் அரசாங்க அச்சகத்திற்கு அனுப்பப்படச் செலவாகும் நேரத்தையும் அவை பிரசுரமாகும் தேதியையும் கருத்திற் கொள்ளுமாறும் எல்லா அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆதியன அறிவுறுத்தப்படுகின்றன.*

*வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கான எல்லா அறிவுறுத்தல்களும் கண்டிப்பாக அவை பிரசுரமாகும் தேதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு முன்*** *இத்திணைக்களத்தை வந்தடைய வேண்டும். அதாவது 2008, யூலை 18 ஆந் தேதி வெள்ளிக்கிழமை வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2008, யூலை 04 ஆந் தேதி நண்பகலிலோ அதற்கு முன்னரோ அரசாங்க அச்சகத்தை வந்தடைய வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அமுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2008 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத்தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந்தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## நீதிச் சேவை ஆணைக்குழு

இலங்கை உயர்நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவி

இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப்பதிவாளர் பதவிக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

2. இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமாகும்.

3. மாதாந்த சம்பள அளவுத்திட்டம் : ரூபா 33,335- 3×790 - 17× 1,050- ரூபா 53,555.

4. **வயது** :- விண்ணப்ப முடிவுத் திகதியின் போது 30 வயதிற்குக் குறையாமலும் 40 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏலவே அரச/கூட்டுத்தாபன சேவையில் சேவையாற்றும் அலுவலர்களிற்கு இவ் உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.)

5. **தகைமைகள்**.- (அ) பதவியில் உறுதிப்படுத்தப்பட்டு இலங்கை குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பிரதிப்பதிவாளராக இருத்தல்.

அல்லது

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத காலத்திற்கு செயற்பாட்டு ரீதியில் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சட்டத்தரணி ஒருவராக இருத்தல்.

**குறிப்பு**.- ஏதாவது அமைச்சு, அரசாங்க திணைக்களம் அல்லது அரச கூட்டுத்தாபனம் ஒன்றில் பதவிநிலைத்தரத்தில் சட்டத்தரணியாக அல்லது சட்டக் கல்லூரியில் சட்ட விரிவுரையாளராக சேவையாற்றிய காலப்பகுதி விண்ணப்பதாரியின் மேற்குறிப்பிட்ட (ஆ) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடு பொருட்டு செயற்பாட்டு ரீதியாக தொழிலில் ஈடுபட்ட காலப்பகுதியாக கருதப்படும்.

6. விண்ணப்பக்காரர் ஒவ்வொருவரும்.-

(அ) இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) அதிசிறந்த குணநலனுடையவராய் இருத்தல் வேண்டும்.

7. விண்ணப்பக்காரர் தேவைப்படுமிடத்து பின்வரும் ஆவணங்களில் ஒன்றையேனும் அல்லது அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டியிருத்தல் வேண்டும் :-

(அ) பிறப்புச்சான்றிதழ் ;

(ஆ) உச்ச கல்வித்தகைமைச் சான்றிதழ் ;

(இ) தொழில்சார் தகைமைச் சான்றிதழ் ;

(ஈ) சிங்களம்/தமிழ்/ஆங்கிலத்தில் சித்தி பெற்ற உச்ச தகைமைச் சான்றிதழ்.

8. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்கள் இத்துடன் இணைக்கப் பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய விண்ணப்பப் படிவத்தினை தயாரித்து. பூர்த்தி செய்யப்பட்ட அவர்களது விண்ணப் பத்தினை "செயலாளர், நீதிச்சேவை ஆணைக்குழு, கொழும்பு 12" என்ற முகவரிக்கு 2008.08.11 அந் திகதி அன்றோ அல்லது அதற்கு முன்னராகவோ கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

9. விண்ணப்பக்காரர் ஏற்கனவே அரச/ அரச கூட்டுத்தாபன சேவையில் சேவையாற்றுபவராயின் அவர்களது விண்ணப்பத்தினை உரிய திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பி வைத்தல் வேண்டும்.

10. விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பம் தபாலில் அனுப்பிய திகதியிலிருந்து ஒரு கிழமைக்குள் கிடைத்தமை பற்றிய அறிவித்தல் கிடைக்கப்பெறாவிடின் பதிவு செய்யப்பட்ட பற்றுச்சீட்டினைக் காண்பிப்பதன் மூலம் இந்த அலுவலகத்திலிருந்து விசாரணை மேற்கொள்ளுதல் வேண்டும்.

பீ. டபிள்யு. டி. சி. ஜயதிலக,
செயலாளர்,
நீதிச்சேவை ஆணைக்குழு.

நீதிச் சேவை ஆணைக்குழுச் செயலகம்,
கொழும்பு 12,
2008, யூன் 16.

## நீதிச் சேவை ஆணைக்குழு

இலங்கை உயர் நீதிமன்றத்தின் பிரதிப் பதிவாளர் பதவி

1. (1) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
   (2) முதலெழுத்துக்களினால் குறிக்கப்படும் பெயர்கள் :----.
2. (1) நிரந்தர முகவரி :----.
   (2) அலுவலக முகவரி :----.
3. இனம் :----.
4. (1) பிறந்த திகதி :----.
   (2) விண்ணப்ப முடிவுத் திகதியின் போது வயது :
   வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
5. (1) பால் :----.
   (2) திருமணமானவரா? திருமணமாகாதவரா? தாரமிழந் தவரா? :----.
   (3) பிள்ளைகளின் எண்ணிக்கை :----.
   (4) அவர்கள் ஆண்பிள்ளைகளா? பெண்பிள்ளைகளா? அவர்களின் வயது? :----.
6. கல்விசார்/தொழில்சார் தகைமைகள் :----.
7. சித்தியடைந்த உச்ச பரீட்சை
   (1) சிங்களத்தில் :----.
   (2) தமிழில் :----.
   (3) ஆங்கிலத்தில் :----.
8. விண்ணப்பக்காரர் இலங்கைக் குடியரசின் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் பிரதிப் பதிவாளராக இருப்பின்,
   (1) அப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :----.
   (2) உறுதிப்படுத்தப்பட்ட திகதி :----.
   (3) அப்பதவிக்கு நியமிப்பதற்கு முன்பு இருந்த பதவி :----.
   (4) விண்ணப்பக்காரர் அரச/ கூட்டுத்தாபன சேவையில் இருப்பவராயின் முதல் நியமன பதவி மற்றும் திகதி :----.
   (5) தற்போதைய வருடாந்த சம்பளம் :----.
   (09 இலிருந்து 17 வரையரயான விபரங்கள் சட்டத்தரணியாக அவர்களது விண்ணப்பத்தினை அனுப்பும் விண்ணப்பக் காரரினால் மாத்திரம் பூர்த்தி செய்யப்படுதல் வேண்டும்.)
09. (1) சட்டத்தொழில் துறையிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட திகதி.
   (2) செயற்பாட்டு ரீதியாக தொழிலிருக்கும் விண்ணப்பக்காரரின் பயிற்சி காலம் திகதி குறிப்பிடப்படுதல் வேண்டும்.
   (3) கடந்த ஆண்டின் போது தொழிலினால் சம்பாதித்த சராசரி வருமானம்.
   (4) வழக்கமாக ஆஜராகும் நீதிமன்றம்.
   (5) நீங்கள் வழக்கமாக ஆஜராகும் நீதிமன்றத்தின் நீதிபதிகள் மூவரின் பெயர்களைத் தருக.
   (6) நீங்கள் தற்பொழுது செயற்பாட்டு ரீதியாக பயிற்சியில் ஈடுபடாதிருப்பின் சட்டத்தரணியாக ஆட்சேர்க்கப்பட்டதன் பின்னர் மேற்கொண்ட தொழில்சார், வகித்த பதவிகள், திகதி மற்றும் வருடாந்த சம்பளம்.
10. சொந்த வருமானம், ஏதாவது இருப்பின் :
   (i) வருமான மூலம் :----.
   (ii) வருடாந்த வருமானம் :----.
11. கடந்த 10 வருட காலப்பகுதிக்குள் அரசியல் நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தீர்களா? :----.

12. இந்தப் பதவிக்காக முன்பு விணணப்பித்திருந்தீர்களா? (அவ்வாறாயின் பதவியும் ஆண்டும்) :----.

13. நீங்கள் வருமானவரி செலுத்துகிறீர்களா? :----.

14. உங்களைப் பற்றி விசாரிக்கக் கூடிய இருவரின் பெயரக்ள் கீழே குறிப்பிடவம். அவர்கள் உங்களை தனிப்பட்ட முறையில் தெரிந்த பொறுப்பு மிக்க ஆட்களாக இருத்தல் வேண்டும்.

(i) பெயர் :----.
(ii) பதவி :----.
(iii) முகவரி :----.

(i) பெயர் :----.
(ii) பதவி :----.
(iii) முகவரி :----.

15. உங்களுக்கு எதிராக மீது ஒழுக்காற்று நடவடிக்கை அல்லது குற்றஞ்சாட்டுக்கள் ஏதேனும் உண்டா? இதற்கு முன்னர் இருந்ததா? அதன் இயல்பை குறிப்பிடவும் :----.

16. அரசாங்க சேவையிலிருந்து பதவி விலகல் தவிர்ந்த நீங்கள் பதவி வெறிதாக்கலுக்கு உட்பட்டீர்களா? :----.

17. திறமைச் சான்றிதழ்கள் ஏதும் இருப்பின் அவற்றைக் குறிப் பிடவும் :----.

இவ்விண்ணப்பத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும் ஏதாவது விபரங்கள் பிழையானவை அல்லது சரியற்றவை என தெரிவுக்கு முன்பு கண்டறியப்பட்டால் நான் தகைமையிழப்புக்கு ஆளாவேன் எனவும் நியமனத்தின் பின்னர் தவறுகள் கண்டறியப்பட்டால் எந்தவித நட்டஈடுமின்றி பதவியிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதனையும் நான் அறிவேன்.

------,
விண்ணப்பக்காரரின் கையொப்பம்.

திகதி :-----.

**திணைக்களத் தலைவரது சான்றுரை**

திரு./ திருமதி/ செல்வி ……………………… என்பவர் இந்த நீதிமன்றத்தில், திணைக்களத்தில், கூட்டுத்தாபனத்தில் …………………… இந்தப் பதவியில் கடமையாற்றுகின்றார் எனவும், அவரினால் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் சரியானவை எனவும் சான்றுப்படுத்துகின்றேன். திரு./ திருமதி/ செல்வி ………………… என்பவர் இந்தப்பதவிக்கு தெரிவு செய்யப்படு வாராயின் தற்போதைய பதவியில் இருந்து விடுவிக்க முடியும் எனவும் நான் இத்தால் தெரிவித்துக்கொள்கின்றேன்.

------,
திணைக்களத் தலைவரது கையொப்பம்.
பதவி :----.
உத்தியோகபூர்வ முத்திரை.

திகதி :-----.

7-117

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திறன் அபிவிருத்தி மற்றும் பொதுத் தொழில் முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சு

இளைஞர் படையணி – 2008

**"இளைஞர் படையணி" பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2008**

வெற்றிகரமான எதிர்காலத்திற்காக வெற்றிகரமான ஆரம்பத்துடன் விசேடமானவர்கள் மத்தியில் நீங்களும் .........

1. பாடசாலைக் கல்வியை நிறைவு செய்துள்ள உங்களது வெற்றிகரமான எதிர்காலத்திற்கு அவசியமான அறிவு, ஆளுமை விருத்தி, மொழி விருத்தி மற்றும் கணனி அறிவு என்பவற்றை வழங்குவதன் மூலம் உங்களது எதிர்கால இலக்கினை வெற்றிகொள்வதற்கு அவசியமான உறுதியான அடிப்படையை "பாடசாலையில் இருந்து தொழில் உலகிற்கு" என்ற தொனிப்பொருளின் கீழ் கட்டியெழுப்புவது யொவுன் திரிய நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படை நோக்கமாகும். தேசிய மற்றும் சர்வதேச தொழிலினை இலக்காகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சியாகவும் ஆத்ம விசுவாசத்துடன் கூடிய சமுக இயலுமையின் மூலம் எதிர்காலத்தினை வெற்றி கொள்வதற்கு எதிர்பார்க்கும் இளைஞர் யுவதிகளும் இந்நிகழ்ச்சி தொடர்பாக விண்ணப்பிக்க முடியும்.

2. **சேர்த்துக்கொள்வதற்கான தகைமைகள்**.- 2008.07.15 ஆந் திகதியில் வயது 17-28 வருடங்களாகக் காணப்படல். க. பொ. த. (சா. த.) உடன் பாடசாலைக் கல்வியை நிறைவு செய்திருத்தல், சாரணியம், மாணவப்படை, விளையாட்டு மற்றும் வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டிருத்தல் மேலதிக தகைமையாகும்.

3. **பயிற்சி நெறி ஆரம்பிக்கும் திகதி**.- 2008 ஆடி 16.

4. **பயிற்சி நெறி வடிவம்**.- * நிறுவனப்பயிற்சி (சகல வேலை நாட்களிலும் காலை 7.30 தொடக்கம் மாலை 4.30 வரை)
*ஆளுமை மேம்படுத்தல்

| நிறுவனப்பயிற்சி | ஆளுமை மேம்படுத்தல் |
|---|---|
| (1) மொழித்திறன் (ஆங்கிலம் மற்றும் தமிழ்) | (1) வெளியகப் பயிற்சி |
| (2) கணனிப் பயிற்சி | (2) முயற்சியாண்மை விருத்தி |
| (3) உடற்பயிற்சி | (3) மனித விருத்தி, செயற்பாடுகள் |
| (4) தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை | (4) தனி மற்றும் குழு ஒப்படை |
| (5) சமூக விஞ்ஞானம் | (5) ஜீவனோபாய அபிவிருத்தி |
| (6) தேசிய உரிமை | (6) தியானத்தின் மூலம் மனதை ஒருநிலைப்படுத்தல் |
| (7) அழகியற் கல்வி நடனம், சங்கீதம், சித்திரக்கலை | |
| (8) ஆளுமை விருத்தி | |

5. **உங்களுக்கு கிடைக்கும் பயன்.**- தொழில் நுட்பக் கல்வி மற்றும் தொழில் பயிற்சியில் ஈடுபடுத்தல்-

* பயிற்சிக் காலத்தில் மாதாந்தம் ரூபா 1,000 ஊக்குவிப்புப் படி வழங்குதல்.
* ரூபா 3,000 சீருடைக் கொடுப்பனவு அல்லது சீருடை வழங்குதல்.
* பயிற்சிக் காலத்தில் காலை மாலை உணவு மற்றும் தேநீர்.
* விளையாட்டு தொடர்பான பயிற்சிப் பட்டறை, இளைஞர் முகாமில் பங்குபற்றல்.
* பயிற்சி முடிவில் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் வழங்குதல்.
* தொழில் நுட்பப் பயிற்சிக்காக ரூபா 10,000 வழங்கப்படும்.

6. **விண்ணப்பங்கள் அனுப்புதல்.**- மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இசைவாக உங்களால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப்படிவத்தினை 2008.07.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு உங்களுக்கு அண்மையில் உள்ள இளைஞர் படையணி காரியாலயத்தில் ஒப்படைக்கவும்.

7. **நேர்முகப் பரீட்சை.**- இளைஞர் படையணி நிகழ்ச்சிக்காகச் சேர்த்துக்கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை உங்களால் குறிப்பிடப்பட்ட இளைஞர் படையணி பயிற்சி நிலையத்தில் 2008.07.07 ஆந் திகதி மு. ப. 9.00 மணியில் இருந்து நடாத்தப்படும். நேர்முகப் பரீட்சை முடிவில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கு அது தொடர்பாக அறிவிக்கப்படும்.

8. **பயிற்சி நெறி ஆரம்பம்.**- 2008.07.15 ஆந் திகதி நடாத்தப்படும் நேர்முகப் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகளின் பயிற்சி 2008.07.16 ஆந் திகதி ஆரம்பிக்கப்படும்.

பணிப்பாளர்,
இளைஞர் படையணி.

இளைஞர் படையணித் தலைமையகம்,
இல. 974/4, பன்னிப்பிட்டிய,
பத்தரமுல்லை.
தொலைபேசி இலக்கம் : 060-2152660, 060-2152661, 060-2152662, 060-2152663, 060-2152664

மாதிரி விண்ணப்பப்படிவம்

**இளைஞர் படையணி - 2008**

"இளைஞர் படையணி" பயிற்சி நிலையத்திற்கு பயிலுனர்களை சேர்த்துக்கொள்ளல் - 2008

1. மாவட்டம் : ______ 2. தேர்தல் பிரிவு : ______

3. பிரதேச செயலாளர் பிரிவு : ______ 4. கிராம சேவையாளர் பிரிவு : ______

5. பயிற்சி பெறுவதற்கு எதிர்பார்க்கும் பயிற்சி நிலையத்தின் பெயர் : ______

6. குடும்ப பெயருடன் முழுப் பெயர் : ______
(தேசிய அடையாள அட்டையில் குறிப்பிட்டபடி) ______

7. முதல் எழுத்துக்களுடன் பெயர் : ______
(ஆங்கிலத்தில்) ______

8. நிரந்தர முகவரி : ______

9. பிறந்த திகதி : ____ | ____ | ____ 2008.07.16 இல் வயது :- வருடங்கள் ____ மாதங்கள் ____ நாட்கள் ____

10. தேசிய அடையாள அட்டை இலக்கம் : ______

11. ஆண்/பெண் : ______

12. கல்வித் தகைமைகள் : (1) க. பொ. த. (உயர். தரம்) ____ (2) க. பொ. த. (சா. தரம்) ____

13. வேறு செயற்பாடுகள் பாடசாலை மாணவத் தலைவர், விளையாட்டுத் தலைவர், இல்ல, மாவட்ட, பிரதேச மற்றும் தேசிய மாவட்ட விளையாட்டுப் போட்டி, மாணவர் படை, சாரண்ய சங்கங்கள், சுய இயக்கங்கள், சமய பாடசாலை என்பவற்றில் ஈடுபட்டிருப்பின் அது தொடர்பான விபரம் :-----.

| |
|---|
| |
| |

14. நிர்மாணத்துவமான செயற்பாடுகள் :-----.

15. வருங்காலத்தில் எதிர்பார்க்கும் தொழில் :-

(1) அரசாங்க திணைக்களத்தில்
(2) அரசாங்கம் அல்லாத திணைக்களங்கள்
(3) சொந்த வியாபாரம்
(4) வெளிநாட்டு வேலைவாய்ப்பு
(5) மற்றும் வேறு
(6) சுய தொழில்

மேலே குறிப்பிட்ட விபரங்கள் உண்மையும் செம்மையானதுமென இத்தால் உறுதிமொழிகிறேன்.

.....................................................
விணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :-----.

**இளைஞர் படையணி பயிற்சி நிலையங்கள்**

| தொடர் இல. | தேர்தல் பிரிவு | பயிற்சி நிலையத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| 1. | பியகம | ஹெய்யந்துடுவ | ஹெய்யந்துடுவ – மாகொல தெற்கு, மாகொல | 0112964040 |
| 2. | கட்டான | கட்டுநாயக்க | தம்மல்லோக வலாகன்கட, கட்டுநாயக்க | 0112260020 |
| 3. | அத்தனகல | அத்தனகல | வத்துபிடிவல, அத்தனகல்ல, நிட்டம்புவ | 0332282232 |
| 4. | தொம்பே | தொம்பே | நதுன்கொல்லவத்த, மண்டவள, தொம்பே | 0602339834 |
| 5. | கம்பஹா | யக்கல | வெரளவத்த, யக்கல, கம்பஹா | 0332233534 |
| 6. | திவுலபிட்டிய | திவுலபிட்டிய | திவுலபிட்டிய, கெட்டிபொல, தயுலுமிட்டிய | 0602337964 |
| 7. | புளத்சிங்ஹல | புளத்சிங்ஹல | புளத்சிங்கள | 0342282322 |
| 8. | நாவுல | நாவுல | நாவுல, ஆறன்கள, நாவுல | 0662246204 |
| 9. | தம்புள்ள | தம்புள்ள | இனாமலுவ, தம்புள்ள | 0602665230 |
| 10. | கம்பொல | கம்பொல | ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி, கம்பளை | 0812352335 |
| 11. | நுவரெலிய | மிபிலிமன்ன | நபிலிமன்ன, அம்பேவெல, நுவரெலிய | 0602536332 |
| 12. | ஹங்குரன்கெத்த | நிகிலஸ்கட | நிகிலஸ்கட, ஹங்குரன்கெத்த | 0812365849 |
| 13. | போபே | காலி-போபே | வெனகொட, போபே, காலி | 0912233182 |
| 14. | அக்மீமன | அக்மீமன | இகலகொட, வுகல்துவ, அக்மீமன | 0912239595 |
| 15. | அக்குரஸ்ஸ | அக்குரஸ்ஸ | மாறம்ப, அக்குறஸ்ஸ | 0414921003 |
| 16. | தங்காலை | எரமினியாய | ஹுங்கம, எரமின்ய | 0602489156 |
| 17. | முல்கிரிகல | வரகெட்டிய | தைகள, அக்குறுவெவ, வீரகெட்டிய | 0472257143 |
| 18. | திஸ்ஸமகாராம | திஸ்ஸமகாராம | சூரியவெவ | 0472288169 |
| 19. | கந்தளாய் | கந்தளாய் | சேனபுர, கந்தளாய் | 0262244088 |
| 20. | நாத்தாண்டிய | நாத்தாண்டிய | சாகரபம, நாத்தாண்டிய | 0325673377 |
| 21. | குளியாப்பிட்டிய | தகம்மெத | தகம்மெத, வேலகம, குளியாபிட்டிய | 0602879228 |
| 22. | வாரியபொல | வாரியபொல | உசாலிமாவத்தை, வாரியபொல | 0602973575 |
| 23. | மாவத்தகம | மாவத்தகம | தென்வோர்வத்த, மாவத்தகம | 0372298668 |
| 24. | பண்டுவஸ்நுவர | பண்டுவஸ்நுவர | நுகவெவ சந்தி, பண்டுகன்நுவர | 0372291803 |
| 25. | தொடங்கஸ்வத்த | தொடங்கஸ்வத்த | மதுரகொட, தோடங்கஸ்வத்த | 0374924982 |
| 26. | கெக்கிராவ | கெக்கிராவ | மாவலி கட்டிடம், கெக்கிராவ | 0252263297 |
| 27. | கலாவெவ | கலாவெவ | கல்னேவ, புல்னாவ | 0252269946 |
| 28. | அநுராதபுரம் | பாளாடிகுளம் | பாளாடிகுளம், அநுராதபுரம் | 0252222297 |
| 29. | பொலநறுவ | அறலகன்வில | கன்சயபாலம, ஆறகன்வில | 0602279016 |
| 30. | பண்டாரவளை | பண்டாரவளை | பிந்துனுவெவ, பண்டாரவளை | 0572222214 |

| தொடர் இல. | தேர்தல் பிரிவு | பயிற்சி நிலையத்தின் பெயர் | முகவரி | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|---|
| 31. | மகியங்கனை | மகியங்கனை | மாபாகடவெவ, மகியங்கன | 0552257059 |
| 32. | தனமல்வில | தனமல்வில | சர்வோதய நிலையம், தனமல்வில | 0602473112 |
| 33. | பட்டன்கல | பட்டன்கல | பட்டன்கல, பனாவல, தெரனியகல | 0362258108 |
| 34. | கலிகமுவ | கலிகமுவ | ஆகிதெனிய, களிகமுவ | 0602359735 |
| 35. | கேகாலை | கேகாலை | கேகாலை | 0602152600 |
| 36. | நிவித்திகலை | நிவித்திகலை | அமபலந்தெனிய, வட்டபொட்ட வீதி, நிவித்திகல | 0452279970 |

7-136

---

## இலங்கை பிரிவேனா ஆசிரியர் சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திலிருந்து 1 ஆம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்கான பரீட்சை - 2007

இலங்கைப் பிரிவெனா ஆசிரிய சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரம் தொடக்கம் அச்சேவையின் முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குவதற்காக நடாத்தப்படும் பரீட்சைக்காக இவ்வறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்துள்ள பதிவுசெய்யப்பட்டுள்ள பிரிவெனாக்களில் சேவையிலுள்ள இலங்கை பிரிவெனா ஆசிரிய சேவையின் பிரிவெனா ஆசிரியர்களிடம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இவ்வறிவித்தலில் அமைச்சு எனப்படுவது கல்வி அமைச்சு என்றும் சேவை எனப்படுவது இலங்கை பிரிவெனா ஆசிரிய சேவை கட்டளைத் தொடர் எனவும் இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவை கட்டளைத் தொடர் மூலம் கருதப்படுகின்றது.

2. **தகைமைகள்**.- முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கும் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக கீழ்க் குறிப்பிடப்பட்ட தகைமைகள் இருக்கவேண்டியதுடன் அத்தகைமைகள் 2004.12.31 ஆந் திகதிக்கு முன்னர் பூரணப்படுத்தியிருக்க வேண்டும் :-

(i) சேவையின் 2 ஆம் வகுப்பின் முதலாம் தரத்தின் பிரிவெனா ஆசிரியர்

(ii) சேவையின் 2 ஆம் வகுப்பின் முதலாம் தரத்தின் சேவைக் காலத்திற்குள் கட்டளைத் தொடரின் உத்தரவுகளுக்கிணங்க 05 புள்ளிகளைப் பெற்றிருத்தல்.

(iii) தொழிற் தகைமைகளைப் பெற்றிருத்தல் (கட்டளைத் தொடரின் உத்தரவுகளுக்கமைய)

**குறிப்பு** :

(i) சேவையின் 2 ஆம் வகுப்பின் 1 ஆம் தரத்திற்குரிய கல்வி முதுமானி, கலைமானி (கல்வி) கல்வி தத்துவமானி மற்றும் வித்தியாபதி பட்டதாரிகள் இப்பரீட்சையிலிருந்து விடுவிக்கப்படுவர்.

(ii) பிரமாணக் குறிப்பில் உள்ள தகைமைகளை பூர்த்திசெய்துள்ள பிரிவெனா ஆசிரியர்கள் பரீட்சைப் பெறுபேறுகள் அடிப்படையில் பதவி உயர்வுகள் வழங்குவதற்காக கருத்திற்கொள்ளப்படும்.

3. **பரீட்சை நடைபெறும் தினம்**.- பரீட்சை 2009, சனவரி மாதம் நடைபெறவிருப்பதுடன் இதனை ஒத்தி வைக்க அல்லது இரத்துச் செய்ய கல்விச் செயலாளருக்கு அதிகாரம் உண்டு.

4. **பரீட்சை மத்திய நிலையம்**.- கீழ்க் குறிப்பிடப்பட்ட நகரங்களில் தாபிக்கப்படும் மத்திய நிலையங்களில் பரீட்சை நடைபெறும். போதியளவு விண்ணப்பதாரிகள் காணப்படாத பரீட்சை மத்திய நிலையங்கள் இரத்துச் செய்யப்பட்டு அவர்களை வேறொரு மத்திய நிலையத்திற்கு அனுப்ப பரீட்சை ஆணையாளரினால் நடவடிக்கை எடுக்கப்படும். பரீட்சை நடைபெறும் நகர மற்றும் நகர இலக்கம் கொண்ட அட்டவணைக்கமைய விண்ணப்பப்படிவத்தில் 2.0 தலைப்பைப் பூர்த்திசெய்ய வேண்டும் :-

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| கொழும்பு | 01 | அனுராதபுரம் | 12 |
| கம்பஹா | 02 | பொலன்னறுவை | 13 |
| களுத்துறை | 03 | பதுளை | 14 |
| காலி | 04 | மொனராகலை | 15 |
| மாத்தறை | 05 | இரத்தினபுரி | 16 |
| அம்பாந்தோட்டை | 06 | கேகாலை | 17 |
| கண்டி | 07 | அம்பாறை | 18 |
| மாத்தளை | 08 | திருகோணமலை | 19 |
| நுவரெலியா | 09 | மட்டக்களப்பு | 20 |

| நகரம் | நகர இலக்கம் | நகரம் | நகர இலக்கம் |
|---|---|---|---|
| குருநாகல் | 10 | வவுனியா | 21 |
| புத்தளம் | 11 | யாழ்ப்பாணம் | 22 |

சேவை இடத்திற்குரிய மாகாணம் (பரீட்சை அறிவித்தலின் 04 (ஆ) பிரிவிற்கமைய உரிய இலக்கத்தை விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடவும்.)

| | | |
|---|---|---|
| மேல் மாகாணம் - 1 | ஊவா மாகாணம் - 4 | வடமத்திய மாகாணம் - 7 |
| தென் மாகாணம் - 2 | சபரகமுவ மாகாணம் - 5 | வடகிழக்கு மாகாணம் - 8 |
| மத்திய மாகாணம் - 3 | வடமேல் மாகாணம் - 6 | |

5. **புள்ளி எல்லை**.- முதலாம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்கும் பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் 40% ஐவிடக் குறையாத புள்ளிகளுடன் மொத்தப் புள்ளிகள் 200 அல்லது அதனைவிடக் கூடுதலாக பெறும் விண்ணப்பதாரர்களிடையே கூடுதலான புள்ளிகளைப் பெற்றோர் வெற்றிட எண்ணிக்கைக்கமைய நேர்முகப் பரீட்சைக்கு அழைக்க தகைமை பெறுவார்கள்.

6. **சேவை நிபந்தனை**.- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் இலக்கம் 1113/12 கொண்ட 2000, சனவரி 4 ஆந் திகதி வெளியிடப்பட்டுள்ள அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளும் அக்கட்டளைத் தொடருக்கு மேற்கொள்ளப்பட்ட மறுசீரமைப்புகளும் அரச சேவைக்குரிய பொது நிபந்தனைகளும் பதவி உயர்விற்காக கருத்திற்கொள்ளப்படும்.

7. **பரீட்சைக்குத் தோற்றும் மொழி**.- (i) இப்பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கில மொழிகளில் நடாத்தப்படுவதுடன் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியது தாம் பிரிவெனா ஆசிரிய சேவையில் பிரவேசிப்பதற்காக தகைமை பெற்ற மொழி மூலமாகும்.

(ii) பரீட்சார்த்தி பரீட்சையின் சகல வினாத்தாள்களுக்கும் ஒரே மொழி மூலம் பதிலளிக்க வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியைப் பின்னர் மாற்றியமைக்க அனுமதி வழங்கப்படமாட்டாது.

8. **பரீட்சைக் கட்டணம்**.- பரீட்சைக் கட்டணம் ரூ. 300 ஆகும். இக்கட்டணம் விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினத்திற்கு முன்னர் வருமானத் தலைப்பு ............ இல் வைப்பிலிடுவதற்காக நாட்டின் எந்தவொரு தபால் அலுவலகத்திலும் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை விண்ணப்பப்படிவத்தின் உரிய கூட்டினுள் ஒட்டவேண்டும். எக்காரணம் கொண்டும் பரீட்சைக் கட்டணம் மீண்டும் செலுத்தப்படமாட்டாது. (பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்டதற்கான பற்றுச்சீட்டின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கது.)

9. **விண்ணப்பிக்கும் முறை**.- (அ) மாதிரி விண்ணப்பப்படிவத்தின் தலைப்பு இலக்கம் 1-4 வரை முதலாவது பக்கத்திலும் 5-7 வரை 2 ஆம் பக்கத்திலும் எஞ்சியதை மூன்றாவது பக்கத்திலும் தயாரிக்க வேண்டியதுடன் அதற்குரிய தகவல்களை தமது கையெழுத்தினால் தெளிவாகக் குறிப்பிட வேண்டும். 9 (அ) தலைப்பில் குறிப்பிடவும். மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு ஒவ்வாத விண்ணப்பப்படிவங்களும் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படாத தகவல்கள் கொண்ட விண்ணப்பப்படிவங்களும் முன்னறிவித்தல் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவத்தின் போட்டோப் பிரதியை தங்களுடன் வைத்திருப்பது பயன்மிக்கதாகும். மேலும் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்தை பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவானதா என்பது குறித்து கவனிக்க வேண்டியதுடன், அவ்வாறின்றேல் விண்ணப்பப்படிவம் நிராகரிக்கப்படும் என்பதனை மேலும் அறியத்தருகிறேன்.

(ஆ) விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2008, ஒற்றோபர் 10 ஆந் திகதி ஆகும். இதற்கு முன்னர் தாங்கள் சேவையாற்றும் பிரிவெனா அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளர் ஊடாக பெலவத்தை, பத்தரமுல்லை, இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தின் பரீட்சை ஆணையாளர் நாயகத்திற்கு விண்ணப்பப்படிவத்தை பதிவுத்தபாலில் அனுப்பவேண்டும். விண்ணப்பப்படிவத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடதுபக்க மேல் மூலையில் "இலங்கை பிரிவெனா ஆசிரியர் சேவையின் 2ஆம் வகுப்பின் 1ஆம் தரத்திலிருந்து 1ஆம் வகுப்பிற்கு பதவி உயர்த்துவதற்கான பரீட்சை" எனக் குறிப்பிட்டிருக்கவேண்டும். தபாலில் தாமதத்தை தவிர்த்துக்கொள்வதற்காக முன்கூட்டியே விண்ணப்பப்படிவத்தை அனுப்புமாறு ஆலோசனை வழங்கப்படுகின்றது. சகல விண்ணப்பப்படிவத்திலும் பரீட்சையின் பெயரை ஆங்கிலத்தில் குறிப்பிட வேண்டும்.

(இ) விண்ணப்பப்படிவத்தை ஏற்றுக்கொள்ளும் இறுதித்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பப்படிவங்களும் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பப்படிவங்களும் நிராகரிக்கப்படும்

(ஈ) அமைச்சு அல்லது பரீட்சைத் திணைக்களத்தின் உத்தியோகத்தர்களின் தனிப்பட்ட பெயர்களுக்கு அனுப்பப்படும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(உ) விண்ணப்பதாரர்களுக்கு பரீட்சைக்கான அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டவுடன் அது தொடர்பாகக் குறிப்பிட்டு பத்திரிகை அறிவித்தல் இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் பிரசுரிக்கப்படும். இவ்வறிவித்தல் பிரசுரிக்கப்பட்டு 2/3 நாட்கள் கடந்ததன் பின்னர் அனுமதிப்பத்திரம் கிடைக்காத பட்சத்தில் அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அது தொடர்பாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிக்கவேண்டும். தாங்கள் வைத்துக்கொண்ட விண்ணப்பப்படிவம் மற்றும் நிதி செலுத்தியதற்கான பற்றுச்சீட்டின் உறுதிசெய்யப்பட்ட போட்டோப் பிரதியையும் பதிவுசெய்த பற்றுச்சீட்டையும் கொழும்புக்கு வெளிப் பிரதேசமாயின் பரீட்சை அனுமதிப் பத்திரத்தை அனுப்புவதற்காக பெக்ஸ் இலக்கத்தையும் குறிப்பிட்டு தங்களது கோரிக்கைக் கடிதத்துடன் பரீட்சைத் திணைக்களத்திற்கு அறிவிப்பது பயன்மிக்கதாகும்.

10.1 **பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள்** :

| | நேரம் மணி | புள்ளி |
|---|---|---|
| (1) பொது அறிவு | 01 | 100 |
| (2) இலங்கைக் கல்விக் கட்டமைப்பு மற்றும் சமநிலைக் கல்வி | 03 | 100 |
| (3) பிரிவெனாக் கல்வி முறைமை | 03 | 100 |
| (4) பிரயோகக் கல்வி மனோவியல் மற்றும் மாணவர் ஆலோசனை | 03 | 100 |

*10.2* **பாடங்கள் மற்றும் பாடவிதானங்கள் :**

*01. பொது அறிவு.- தேசிய மற்றும் சர்வதேச ரீதியிலான கல்வி கலாசாரம் பொருளியல் சமூகவியல் விளையாட்டு விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத் துறைகள் தொடர்பான பொது அறிவு கொண்ட வினாப்பத்திரம்*

*02. இலங்கையின் கல்விக் கட்டமைப்பு மற்றும் சமநிலைக் கல்வி*
*கல்விக் கட்டமைப்பு - ஆரம்ப இடைநிலை மூன்றாம் நிலை கல்விக்கொள்கை கல்வித் தேவை ஆக்கம் கல்வியின் பங்கேற்பு மாணவர் முன்னேற்றம் மேற்பார்வை உயர் கல்விக்கான தேவை.*

*இத்துறைகள் தொடர்பாக 1960 ஆம் ஆண்டிற்குப் பின்னர் இலங்கை, இந்தியா, ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், ருஷ்யா, ஜப்பான் ஆகிய நாடுகளில் காணப்படும் சமநிலை தொடர்பான விளக்கம் மற்றும் ஆய்வுகள் விசேடமாக கருத்திற்கொள்ளப்படும்.*

*கல்வி மற்றும் தொழில் ஆக்கம் (பிரிவெனாக் கல்விக் கட்டமைப்பு) பிரிவெனாக் கல்வி நோக்கம், பிரிவெனாக் கல்வியின் வெளியீடுகள் தொடர்பான வினாப்பத்திரங்கள்.*

*03. பிரிவெனாக் கல்வியின் கல்வி முறைமை.- மாணவ அடைவு மதிப்பீடு மோதல் தவிர்ப்புக்கான கல்வி திறந்த கற்கை வகுப்பறை மற்றும் பிரிவெனா மேற்பார்வை ஆசிரிய வகையை தீர்மானித்தல் கல்விக் கணக்காய்வு கல்வித் தொழில்நுட்பம் மற்றும் கற்றல், கற்பித்தல் தொடர்பான சிந்தனை மற்றும் அவற்றின் விசேட சந்தர்ப்பங்கள் தொடர்பாக ஆரம்ப, இடைநிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வித் துறைகளில் காணப்படும் அடைவு முன்னேற்றங்கள் மற்றும் செயற்பாடுகள் தொடர்பான அறிவு மாணவர் போதனை தொடர்பான பௌத்த விதிமுறைகள் தனிநபர் ரீதியான மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்ட தனிப்பட்ட கற்கைகள்.*

*04. பிரயோகக் கல்வி மனோவியல் மற்றும் மாணவர் ஆலோசனை.- சிறுவர்கள் மற்றும் இளைஞர்களின் தேவைகளை உணருதல் அத்தேவைகளுக்குப் பொருந்தக்கூடியவாறான கல்விக்கான சந்தர்ப்பத்தை உருவாக்குதலும் மாணவர் முன்னேற்ற மேற்பார்வை பிரிவெனாவை அடிப்படையாகக் கொண்ட ஆலோசனை வேலைத்திட்டம் கற்றல் கலாசாரம் மற்றும் அது தொடர்பான ஆசிரியர்களின் பணிகள் பிரிவெனாக்களின் ஆலோசனைச் செயற்பாடுகளும் ஆலோசனைச் செயற்பாடுகள் தொடர்பான பணிகள் மாணவர்களின் தன்மை மற்றும் நவீன மாணவர் பிரச்சினைகளை புரிந்துகொள்ளல், மாணவர்களின் கற்றலை ஊக்குவித்தல் மற்றும் ஆர்வமூட்டும் வழிமுறைகள், சிறுவர்கள் மற்றும் இளம்பராயத்தினரின் விசேட அபிவிருத்தித் தேவைகள், அடையாளங்கள், மேற்கூறப்பட்ட துறைகள் தொடர்பான விளக்கம் மற்றும் ஆய்வுகள்.*

* இவ்வறிவித்தலுக்குட்படாத விடயங்கள் தொடர்பாக இறுதி தீர்மானம் எடுக்கும் அதிகாரம் கல்வி அமைச்சின் செயலாளருக்குரியதாகும்.

*11. இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகளின் அடையாளத்தை பரீட்சை மண்டபப் பொறுப்பாளருக்கு உறுதிப்படுத்துவதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை அல்லது செல்லுபடியாகும் கடவுச் சீட்டு மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*12. பரீட்சார்த்திக்கு பரீட்சை அனுமதிப்பத்திரம் வழங்குவது அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கான சகல தகைமைகளையும் பூர்த்திசெய்தவர் என்பதனை கருத்திற்கொண்டல்ல.*

*13. பரீட்சை நடாத்தப்படுவது தொடர்பாக பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் சட்ட ஒழுங்குகளுக்கு பரீட்சார்த்தி கட்டுப்படவேண்டும். அச்சட்ட ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் விதிக்கப்படும் தண்டனைகளுக்கு அவர் உட்படவேண்டியேற்படும்.*

எம். எம். என். டீ. பண்டார,
*கல்விச் செயலாளர்,*

பத்தரமுல்லை, பெலவத்தை, இசுருபாயவில் அமைந்துள்ள,
*கல்வி அமைச்சு,*
*2008, யூன்.*

*7-273*

## கல்வி அமைச்சு

*ஆசிரியர் கல்லூரிகளில் ஆசிரியர் கல்விப் பாடநெறியைப் பின்பற்றுவதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2009*

ஆசிரியர் கல்லூரிகளில் ஈராண்டு கால ஆசிரியப் பயிற்சி நெறியை மேற்கொள்வதற்குப் பின்வரும் தகைமைகள் கொண்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :-

1.1 கல்விச்சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் அல்லது மாகாண அரச சேவைகள் ஆணைக்குழுவின் செயலாளர் கையொப்பத்துடன் முறையான நியமனத்தைப் பெற்று அரசாங்கப் பாடசாலைகளில் பணியாற்றும் பயிற்றப்படாத ஆசிரியர்கள்.

1.2 கல்வியமைச்சின் தனியார் பாடசாலைகளின் பணிப்பாளரால் உறுதிப்படுத்தப்பட்ட தனியார் பாடசாலைகளின் பெயர்ப் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ள மற்றும் மாகாணக் கல்விப்பணிப்பாளர் அனுமதியளித்துள்ள நியமனங்களைக் கொண்டுள்ள ஆசிரியர்கள்.

1.3 கல்வியமைச்சின் பிரிவெனா கல்விப்பிரிவில் பதிவுசெய்யப் பட்டு மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அங்கீகரிக்கப்பட்ட நியமனங்களைக் கொண்ட பிரிவெனா ஆசிரியர்கள்.

1.4 மகரகமை தேசிய கல்வி நிறுவகத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்ட தொலைக்கல்வி அல்லது பிரின்செட் ஆசிரியர் பயிற்சிநெறியை மேற்கொண்டு சித்திபெறவில்லையென தொலைக்கல்வி ஆசிரியர் பயிற்சி அதிகாரிகளால் உறுதிப்படுத்தப்பட்டுள்ள ஆசிரியர்கள்.

**2. விசேட அறிவுறுத்தல்கள் :**

2.1 2012 ஆம் ஆண்டுக்கு முன்னர் பயிற்றப்படாத அனைத்து ஆசிரியர்களையும் பயிற்றுவிப்பதற்கும் அதன் பின்னர் பயிற்றப்படாத எவரும் பாடசாலைகளில் கற்பித்தல் பணிகளில் ஈடுபடுத்தக்கூடாது என உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக கல்வி அமைச்சின் செயலாளரின் தீர்மானமே இறுதி முடிவாக கொள்ளப்படும்.

2.2 தெரிவானது ஆசிரியர் கல்லூரியில் காணப்படும் வெற்றிடத் திற்கேற்ப பாடசாலையில் கடமையேற்றதன் முன்னுரிமையின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும். பயிற்றப்படாத ஆசிரியர்களின் பதவி உயர்வின்போது தொழிற்றகைமை இல்லாமையால் பாதிப்பேற்படுவது மட்டுமன்றி பாடசாலைக் கல்வியின் தரவிருத்தியை மேம்படுத்துவதற்குத் தடையாகவும் அமையும். அத்துடன் வருங்காலத்தில் பயிற்சிபெறும் வாய்ப்புக் கிடைக்காமல் போகக்கூடிய பாதிப்பினைத் தவிர்த்துக் கொள்வதற்காகவும் பயிற்றப்படாத ஆசிரியர்கள் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டு மெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

2.3 இப்பயிற்சிநெறி ஈராண்டுகால உள்ளகப் பயிற்சியாக அமைவதுடன் விடுதிவசதிகள் இல்லாதவிடத்து கல்லூரி அதிபரின் எழுத்துமூல அனுமதியுடன் கல்லூரிக்கு அண்மை யில் தங்கியிருப்பதற்கு அனுமதிக்கப்படும்.

2.4 ஒவ்வொரு கல்லூரியிலும் நடத்தப்படும் பயிற்சிநெறிகள் மற்றும் வசதிகள் என்பவற்றுக்கேற்ப ஆசிரியர் கல்லூரிகள் தீர்மானிக்கப்படுவதுடன் எப்போதும் கிட்டிய கல்லூரியைப் பெற்றுத்தரமுடியாதிருக்கும்.

2.5 ஆசிரியர் கல்லூரியின் பயிற்சிக்காலப்பகுதியில் வேறு பாடநெறிகளைப் பின்பற்றுவதோ வேறு வெளிவாரிப் பரீட்சைகளுக்குத் தோற்றுவதோ கூடாது. அது தொடர்பாகக் கிடைக்கப்பெறும் தகவல்கள் மற்றும் பாடநெறியை விட்டுச்செல்லல் தொடர்பில் முறையான விசாரணையின்பின் ஒழுங்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

2.5 பின்வரும் ஆசிரிய வகையினருக்கு இப்பாடநெறி பொருந்தாது :-

(அ) ஏதாவதொரு ஆசிரிய கல்லூரியொன்றில் பயிற்சியைப் பெற்றுக்கொண்டிருக்கும் அல்லது பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள்.
(ஆ) பட்டதாரி நியமனம் அல்லது பட்டதாரிப் பயிலுநர் நியமனம் அல்லது பட்டதாரி முகாமைத்துவ உதவியாளர் நியமனம் அல்லது அதற்குச் சமமான ஏதாவதொரு பட்டதாரி நியமனம் பெற்றுள்ளவர்கள்.
(இ) இதன் 7 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமை களைப் பெற்றிராத ஆசிரியர்கள்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்திசெய்யாதவர்கள் பாடநெறிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக அறியவரக்கூடிய எச் சந்தர்ப்பத்திலும் பயிலும் காலத்திலாயினும் சரி, பயிற்சி இரத்துச் செய்யப்படுவதோடு பயிற்சியின் பின்பாயின் அவரின் பயிற்சிச் சான்றிதழ் செல்லுபடியற்றதாக்கப்படும்.

2.6 ஒவ்வொரு விண்ணப்பதாரியும் கீழே குறிப்பிடப்படும் ஆவணங்கள் பயிற்சிக்காகப் பதிவு செய்வதற்கு அழைக்கப்படும் தினத்தன்று ஒப்படைக்கப்பட வேண்டும் :-

(அ) பூரணப்படுத்தப்பட்ட பிணைமுறி.
(ஆ) ஆசிரிய கல்விப் பாடநெறியைப் பூர்த்திசெய்த பின் நியமனம் வழங்கப்படும் பாடசாலைகளில் (அரசாங்க ஆசிரியர்கள் அரசாங்கப் பாடசாலைகளுக்கும் அரசாங்க சேவையில் இல்லாத ஆசிரியர்கள் உரிய நிர்வாகக் குழுவின் கீழும்) தொடர்ச்சியாக ஐந்து ஆண்டுகள் சேவை செய்வதாக அரசுடன் அல்லது நிர்வாகக் குழுவுடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தப் பத்திரத்தின் பிரதி.

2.7 1982 ஆம் ஆண்டின் ஏப்பிறல் மாதத்தின் பின்பு மாவட்ட சேவைத்திட்டத்தின் கீழ் நியமனம் பெற்று பயிற்சிக்காகச் சேரும் ஆசிரியர்கள் பயிற்சியின் பின்பும் முதல் நியமனம் பெற்ற அம்மாவட்டங்களிலேயே கடமையாற்றுவதற்குக் கேட்டுக் கொள்ளப்படுவர்.

2.8 ஆசிரிய கல்லூரிக்கு அனுமதிக்கப்பட்ட பின் ஒரு பயிற்சி ஆசிரியர் தனது விருப்பத்தின் பேரில் பயிற்சியினை இடைநிறுத்த அனுமதி வழங்கப்படமாட்டாது.

3. (i) ஆசிரிய கல்லூரி அதிபரினால் எதிர்பார்க்கப்படும் மட்டத்திற்கு வரவு மற்றும் கற்றல் என்பனவற்றில் ஊக்கம் காட்டாத பயிற்சியாளர்கள் பயிற்சியிலிருந்து நிறுத்தப்படுவர். பயிற்சி பெறும் ஒரு ஆசிரியரின் பாடங்களுக்கான பங்களிப்பு, வரவு என்பன 90% திற்குக் குறைவாயின் அவர் ஆசிரிய கல்லூரி இறுதிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அனுமதி வழங்கப் படமாட்டாது. எனினும் இது தொடர்பாக கல்விச் செயலாளரின் தீர்மானமே இறுதியானதாகும்.

(ii) பயிற்சிக் காலத்தில் கல்லூரிகளின் ஒழுக்காற்று ஒழுங்கு முறைகளை அனுசரித்து நடக்கத்தவறும் பயிற்சி ஆசிரியர்கள் பயிற்சியிலிருந்து இடைநிறுத்தப்படுவதோடு எக்காலத்திலும் பயிற்சிக்கு

மீண்டும் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள் என்பது கவனத்திற்கொள்ளப் பட வேண்டும்.

(iii) விடுமுறை : நிறுவனப் பயிற்சிக்காக ஈராண்டு முழுச்சம்பளத்துடனான கற்கை விடுமுறை வழங்கப்படும். இக்கற்கை விடுமுறைக் காலத்தை முழுமையாகப் பயிற்சிக்காகப் பயன்படுத்த வேண்டும். எனினும் ஆசிரிய பயிற்சி பெறுபவருக்கு அவசியமென அதிபர் திருப்தியடையக்கூடிய பட்சத்தில் மாத்திரம் குறிப்பிட்ட நாட்கள் அமைய விடுமுறை வழங்கப்படலாம்.

அதற்காக அதிபரின் முன்னனுமதி பெற்றுக்கொள்ளப் பட வேண்டும் என்பதை கருத்திற்கொள்ளவும். இவ்வாறு பெற்றுக்கொள்ளப்படும் விடுமுறை ஆண்டுக்கு பத்து (10) நாட்களுக்குக் கூடாதிருக்க வேண்டும்.

அதிக விடுமுறைகளைப் பெற்றுக்கொள்வதன் காரணமாக பாடநெறியைப் பின்பற்றுவதில் முன்னேற்றம் திருப்தியற்றதாகவும் யாராவது ஒரு பயிற்சிதாரர் பற்றி அதிபர் அறிக்கை சமர்ப்பிப்பின் பாடநெறிக் கற்கையை இடை நிறுத்தி மீண்டும் பாடசாலைக்கு அனுப்பி வைக்கப்படுவர். வைத்திய விடுமுறைகளுக்கு அரசாங்க அனுமதிபெற்ற வைத்தியரின் வைத்தியச் சான்றிதழ் மாத்திரம் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

பயிற்சிபெறும் காலத்தில் யாராவது ஒரு பெண் பயிற்சியாளர் கருவுற்றிருப்பது அவரது பயிற்சிக்குத் தடையாக உள்ளதென்று நிரூபிக்கப்படும் சந்தர்ப்பங்களில் அவரது பயிற்சியைத் தொடர்வது பற்றிய தீர்மானம் எடுக்கும் உரிமை கல்வி அமைச்சின் செயலாளரைச் சாரும்.

4. ஆசிரிய கல்லூரியினால் நடாத்தப்படும் உள்ளகப் பரீட்சைகள் மற்றும் ஈராண்டு கால ஆசிரிய பயிற்சி நெறியை வெற்றிகரமாகப் பூரணப்படுத்தியதன் பின்னர் பரீட்சை ஆணையாளரினால் நடாத்தப்படும் இறுதிப்பரீட்சையில் சித்தி பெறுவோருக்கு ஆசிரியப் பயிற்சிச் சான்றிதழ் வழங்கப்படும்.

5. **சம்பள அளவுத்திட்டம்**.- ஆசிரியர் சேவைப் பிரமாணத்துக்கு அமைவாக பின்னர் மேற்கொள்ளப்பட்ட திருத்தத்திற்கு உட்பட்டதாக பயிற்றப்பட்டஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்பட்டு ஏற்புடைய சம்பள அளவுத்திட்டம் நிர்ணயிக்கப்படும்.

6. (i) ஒவ்வொரு விண்ணப்பதாரியும் நியமனக் கடிதத்தில் குிறப்பிடப்பட்டுள்ள நியமன வகைக்கேற்பவே ஆசிரிய பயிற்சியைப் பெறவேண்டும். ஏனைய பாடத்தில் நியமனம் பெற்றவர்கள் விசேட பாடநெறிக்கு விண்ணபிக்க முடியும். அரசாங்க ஆசிரியர்களாக நியமனம் பெற்ற அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்படாதவர்களைப் பொறுத்தவரை க. பொ. த. (உயர்தரம்) பரீட்சையில் அவர்கள் சித்தி பெற்றுள்ள பாடங்களுக்கேற்ப அவர்கள் விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சையின்போது குறித்த பாடத்தைக் கற்பிக்கின்றார் என நிறுவனத் தலைவரால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதத்தினைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

க. பொ. த. (சாதாரண தர) தகைமையின் அடிப்படையில் நியமிக்கப்பட்டு அவர்களின் நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களாகவே கருதப்படுவர்.

நியமனக் கடிதத்தில் நியமனத்தின் வகை குறிப்பிடப்பட்டிராத தனியார், பிரிவெனா ஆசிரியர்களைப் பொறுத்தவரை அவர்கள் கற்பித்த பாடங்களின் அடிப்படையில் பயிற்சிக்கான தெரிவு இடம்பெறும். இவ்வகையினர் நிறுவனத் தலைவரால் அங்கீகரிக்கப்பட்ட நேரசூசி பிரதி ஒன்றைச் சமர்ப்பித்தல் அவசியமாகும்.

(ii) ஏதாவதொரு பாடநெறி ஒன்றிற்குப் போதிய விண்ணப்பதாரிகள் தொகை இல்லாதிருப்பின் அப்பாடநெறியை நடாத்துவது அல்லது நடாத்தாதிருப்பது பற்றி கல்வி அமைச்சின் செயலாளர் தீர்மானிப்பார். கீழ்க்குறிப்பிடப்படும் பாடநெறிகளுள் ஒரு பாடநெறிக்கு மாத்திரம் விண்ணப்பிக்க வேண்டும் :-

| பாடநெறி எண் | பாடநெறியின் பெயர் |
|---|---|
| 01 | சிங்களம் |
| 02 | ஆரம்பக் கல்வி |
| 03 | சமூகவியல் |
| 04 | விஞ்ஞானம் |
| 05 | கணிதம் |
| 06 | விவசாயம் |
| 07 | மனையியல் |
| 08 | ஆங்கிலம் |
| 09 | புத்த சமயம் |
| 10 | கிறிஸ்தவம்/ரோமன் கத்தோலிக்க சமயம் |
| 11 | இந்து சமயம் |
| 12 | இஸ்லாம் |
| 13 | சித்திரம் |
| 14 | சங்கீதம் |
| 15 | நடனம் |
| 16 | அரபு |
| 17 | விசேட கல்வி (சிங்கள மொழி மூலம்)<br>(அ) செவிப்புலன் குறைந்த (காதுகேட்காதோர்) பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் முறைகள்.<br>(ஆ) கட்புலன் குறைந்த (கண் பார்வை குறைந்த) பிள்ளைகளுக்கு கற்பிக்கும் முறைகள்.<br>(இ) உளவாற்றல் குறைந்த (நுண்ணறிவு குறைந்த) பிள்ளைகளுக்கு கற்பிக்கும் முறைகள். |
| 18 | கைப்பணியும், தொழில் நுட்பமும் |
| 19 | வணிகம் |
| 20 | தமிழ் |
| 21 | உடற்கல்வி |
| 22 | இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்) |

7. (1) **தகைமைகள்** : ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும் :-

(i) சிறந்த நல்லொழுக்கமுடையவராக இருக்க வேண்டும்.

(ii) இலங்கைப் பிரசையாக இருக்க வேண்டும்.

(iii) இரண்டு தடவைகளுக்கு மேற்படாத வகையில் கணிதம், தாய்மொழி உட்பட 6 பாடங்களில் க. பொ. த. (சா. த.) அல்லது தே. பொ. க. த. பரீட்சையில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(iv) சகல விண்ணப்பதாரரும் தமது நியமனத்தின் தன்மையை முதல் நியமனக் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

(v) அரசாங்கப் பாடசாலைகளில் சேவையாற்றும் ஆசிரியர்கள் 2008.08.15 ஆந் திகதிக்கு குறைந்தபட்சம் மூன்று மாத காலம் ஆசிரியராக தமது சேவையைப் பூர்த்தி செய்திருக்கவேண்டும்.

(2) கீழ்க் குறிப்பிடப்படும் பாடநெறிகளைத் தெரிவு செய்ப வர்களுக்கு மேற்சொல்லப்பட்ட தகைமைகளுக்கு மேலதிகமாக கீழ்க்குறிப்பிடப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(அ) சிங்கள மொழிப் பயிற்சி நெறி :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சிங்கள மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(ஆ) விஞ்ஞானப் பாடநெறி :

(i) பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், தாவரவியல், உயிரியல், விலங்கியல், இரசாயனவியல், கணிதம் ஆகிய பாடங்களில் இரண்டிற்காவது க. பொ. த. (சா. த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். (உயிரியல், விலங்கியலோடு அல்லது தாவரவியலோடு கணிக்கப்படமாட்டாது.) அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விஞ்ஞானம், கணிதம் பாடங்களில் சித்தி பெற்றிருத்தலும், விஞ்ஞானத்தில் சிறப்புச் சித்தி பெற்றிருத்தலும், அல்லது

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களில் இரண்டில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(இ) கணிதப் பாடநெறி :

(i) பழைய பாடத்திட்டத்தின் பௌதீகவியல், பிரயோக கணிதம், தூய கணிதம், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் குறைந்தபட்சம் இரண்டிலாவது க. பொ. த. (சா. த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் இரண்டு திறமைச் சித்திகள் பெற்றிருத்தல் ; அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம், விஞ்ஞானம் சித்தி பெற்றிருத்தலோடு, கணித பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iii) மேற்குறிப்பிடப்பட்டுள்ள பாடங்களுள் இரண்டு பாடங்களில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஈ) விவசாயப் பாடநெறி :

(i) பழைய பாடத்திட்டத்தின் க. பொ. த. (சா. த.) இல் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(ii) புதிய பாடத்திட்டத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் விஞ்ஞானம், விவசாய விஞ்ஞானம் சித்தியடைந் திருத்தல். அத்துடன் விவசாய விஞ்ஞானத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்; அல்லது

(iii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விவசாயம், இரசாயனவியல், தாவரவியல், விலங்கியல் ஆகிய பாடங்களில் ஏதாவதொன்றில் சித்தி பெற்றிருத்தல்; அல்லது

(iv) தே. க. பொ. சா. பரீட்சையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு ''ஏ'' அல்லது ''பி'' தேர்ச்சி பெற்றிருத்தல் (தொழில் முன்னிலைப் பாடமொன் றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்) ; அல்லது

(v) அரசாங்க விவசாய பண்ணையொன்றில் 06 மாத காலங்களுக்குக் குறையாத பயிற்சியைப் பெற்றிருத்தல்.

(உ) மனையியற் பாடநெறி :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் மனையியல், தையல் வேலை ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்; அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மனையியல் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iii) தே. க. பொ. த. பரீட்சையில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பாடத்திற்கு "ஏ" அல்லது "பி" சித்தி பெற்றிருத்தல் (தொழில் முன்னிலைப் பாடமொன்றெனில் என்ன பாடமென்று அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட ஒரு கடிதம் அவசியமாகும்) ; அல்லது

(iv) அரசாங்க தொழில்நுட்பக் கலலூரியொன்றில் ஓர் ஆண்டிற்குக் குறையாத மனையியற் பயிற்சியைப் பெற்றதற்கான சான்றிதழ்.

(ஊ) ஆங்கிலப் பாடநெறி :

(i) தற்போது ஆங்கில உதவி ஆசிரியர் நியமனம் பெற்றிருத்தல் ; அல்லது

(ii) ஆங்கிலம் I, II, III, ஆந் தர ஆசிரியத்தராதரப் பத்திரம் பெற்று தற்போது சேவையில் இருப்பதுடன்.

(iii) க. பொ. த. (சா. த.) (London O/L) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடாசலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) அதற்கு மேல் உயர் பரீட்சை ஒன்றில் ஆங்கிலப் பாடத்தில் சித்தி பெற்றிருத்தல்.

(எ) சமய பாடநெறி :

(i) ரோமன் கத்தோலிக்க சமயம், இந்து சமயம், இஸ்லாம் சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தான் தொடர்வதற்கு எதிர்பார்க்கும் சமய பாடத்தில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்; அல்லது

(ii) தே. க. பொ. த. பரீட்சையில் "ஏ" அல்லது "பி" தரச் சித்தி பெற்றிருத்தல் அல்லது

மேலே (i) இல் குறிப்பிட்ட பாடத்தில் அல்லது அதனுடன் தொடர்புடைய பாடமொன்றில் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

(ஏ) சித்திரப்பாடநெறி :

(i) அரச கவின் கலை நிறுவனத்தின் சான்றுப் பத்திரம் (சித்திரம் பற்றிய மூன்று வருட பயிற்சிநெறி) ; அல்லது

(ii) சித்திரக் கலை ஆசிரிய தராதரப் பத்திரம் ; (சிங்களம்/ தமிழ்/ஆங்கிலம்) ; அல்லது

(iii) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்திரப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(iv) தே. க. பொ. சா. பரீட்சையில் சித்தி பாடத்தில் ''ஏ'' அல்லது ''பீ'' தரச் சித்தி பெற்றிருத்தல். (அழகியற் கலைப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.) ; அல்லது

(v) க. பொ. த. (உயர் தரப்) பரீட்சையில் சித்திரப் பாடத்தில் சித்திபெற்றிருத்தல்.

(ஐ) சங்கீதப் பாடநெறி :

(i) இலங்கைக் 'காந்தர்வ' சபையின் சங்கீதம் பற்றிய இறுதி/ மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையில் அல்லது தேசிய சங்கீதப் பரீட்சையின் ஆரம்பப் பரீட்சை; அல்லது

(ii) அரசாங்க சங்கீதக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

(iii) வட இலங்கை கீழைத்தேய சங்கீத ஆசிரிய சங்கத்தின் சங்கீத சான்றிதழ் (5 ஆம் வகுப்பு) ;அல்லது

(iv) அங்கீகரிக்கப்பட்ட இந்திய சங்கீத நிறுவனமொன்றில் சங்கீதம் பற்றிய இடைமாணித் தராதரப் பத்திரம் அல்லது

(v) க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திர பரீட்சையில் சங்கீத பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vi) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் சங்கீத பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vii) தே. க. பொ. சா பரீட்சையில் சங்கீத பாடத்தில் ''ஏ'' அல்லது ''பி'' தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கலைப் பாடம் எது என்பதை அதிபர் கடித மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.)

(ஒ) நடனப் பாடநெறி :

(i) இலங்கைக் காந்தர்வ சபையின் நடனம் பற்றிய இறுதி/ மத்திம சான்றுப்பத்திரம் அல்லது கீழைத்தேய நடனப் பரீட்சையில் அல்லது தேசிய நடனப் பரீட்சையின் முதலாம் பரீட்சையில் ; அல்லது

(ii) அரசாங்க நடனக் கல்லூரியின் இடைநிலைச் சான்றுப்பத்திரம் ; அல்லது

(iii) அங்கீகரிக்கப்பட்ட இந்திய நடன நிறுவனமொன்றில் நடனம் பற்றிய இடைமாணித் தராதரப் பத்திரம் ;அல்லது

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லத சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் நடன பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(v) க. பொ. த. (உ.த.) பரீட்சையில் நடன பாடத்தில் சித்தி பெற்றிருத்தல் ; அல்லது

(vi) தே. க. பொ. சா. பரீட்சையில் நடன பாடத்தில் ''ஏ'' அல்லது ''பி'' தரச் சித்தி பெற்றிருத்தல் (அழகியற் கல்விப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப் படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.)

(ஓ) அரபுப் பாடநெறி :

(i) பரீட்சைத் திணைக்களத்தினால் நடாத்தப்படும் அல் ஆலிம் ஆரம்பப் பரீட்சையின் I ஆம் II ஆம் பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அரபுப் பாடத்தில் சித்திபெற்றிருத்தல்.

(ii) அங்கீகரிக்கப்பட்ட 'மத்ரஸா' நிறுவனமொன்றின் இறுதிப் பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல். இதற்கான அங்கீகரிக்கப்பட்ட மத்ரஸாக்கள் வருமாறு

மேலே (i) மற்றும் (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருப்போர் வேறு நியமனம் பெற்றிருப்பினும் அறபுப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

(1) பஹ்ஜதுல் இப்ராஹீமிய்யா அரபுக் கல்லூரி, கோட்டை, காலி.
(2) கபூரிய்யா அரபுக் கல்லூரி, மகரகம.
(3) மத்ரஸதுல் பாரி அரபுக் கல்லூரி, வெலிகம.
(4) நத்வத்துல் உலமா அரபுக் கல்லூரி, மூதூர்.
(5) காசிமிய்யா அரபுக் கல்லூரி, புத்தளம்.
(6) கிழக்கிலங்கை அரபுக் கல்லூரி, அட்டாளைச்சேனை
(7) மத்ரஸதுல் பலாஹ் அரபுக் கல்லூரி, காத்தான்குடி.
(8) முஸ்லிம் மகளிர் அரபுக் கல்லூரி, கல் எலிய.
(9) மத்ரஸதுல் ஜிப்ரிய்யா அரபுக் கல்லூரி, காலி.
(10) ஹியாதியா அரபுக் கல்லூரி, மாதம்பை.
(11) நத்வத்துல் புஹாரி அரபுக் கல்லூரி, கிண்ணியா.
(12) மத்ரஸதுல் நூராணியா அரபுக் கல்லூரி, கொட்டுவகொட, மாத்தறை.
(13) மக்கியா அரபுக் கல்லூரி, காலி அல்லது
(14) வேறு அங்கீகரிக்கப்பட்ட நிறுவகம் (நேர்முகப் பரீட்சையின் போது அந்த நிறுவனம் அங்கீ கரிக்கப்பட்டுள்ளதென்று சான்று சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

(ஔ) விசேட கல்விப் பாடநெறி :
(சிங்கள மொழிமூலம்) இப்பயிற்சி நெறி மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(1) கட்புலன் குறைந்த (பார்வை) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.

(2) செவிப்புலன் குறைந்த (கேள்வி) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.

(3) உளவாற்றல் குறைந்த (நுண்ணறிவு குறைவு) பிள்ளைகளுக்குக் கற்பித்தல்.

(க) கைப்பணி தொழில்நுட்பத்திறன் பயிற்சி நெறி :

(i) க. பொ. த. (சா.த) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில்

கைப்பணி
* மரவேலை
* உலோக வேலை
* நெசவு
* மட்பாண்டம்

* மோட்டார் தொழில்நுட்பம்
* வானொலி தொழில்நுட்பம்
* மேசன் வேலை

ஆகிய பாடங்களில் ஒன்றில் திறமைச் சித்தி பெற்றிருத்தல். அல்லது

(ii) தே. க. பொ. சா. சான்றிதழ் பரீட்சையில் குறிப்பிட்ட பாடத்தில் "ஏ" அல்லது "பி" தரச் சித்தி பெற்றிருத்தல் (தொழில் முன்னிலைப் பாடம் எது என்பதை அதிபரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடிதம் அவசியம்.)

(iii) அரச தொழில்நுட்பப் பாடசாலையொன்றில் அல்லது அரச திணைக்களமொன்றின் கீழ் நடாத்தப்படும் ஒரு வருடத்துக்குக் குறையாத பயிற்சி நெறியொன்றை திருப்திகரமாகப் பூர்த்தி செய்து பெற்ற பயிற்சிச் சான்றிதழ் பெற்றிருத்தல்.

(கா) வர்த்தகப் பாடநெறி :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் அல்லது சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் பொருளியல், வர்த்தகம், கணக்கியல், தட்டச்சு, சுருக்கெழுத்து, வர்த்தகமும் நிதியும், சுருக்கெழுத்தும் தட்டச்சும் ஆகியவைகளில் இரண்டு பாடங்களில் திறமைச்சித்திகள் பெற்றிருத்தல், அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் மேற்குறித்த பாடங்கள் இரண்டில் சித்தியடைந்திருத்தல், அல்லது

(iii) அரசினர் தொழில்நுட்பக் கல்லூரியொன்றில் ஒரு வருட வர்த்தகப் பாடநெறியில் சித்தியடைந்து சான்றிதழ் பெற்றிருத்தல்.

(கி) தமிழ் மொழிப் பயிற்சி நெறி :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சையில் தமிழ் மொழிப் பாடத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல்.

(கீ) உடற் கல்விப் பாடநெறி :

(i) தற்போது உடற் கல்விப் பாட ஆசிரியராக நியமனம் பெற்றிருத்தல்.

(கு) சமூகவியல் பாடநெறி :

(i) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சமூகக்கல்வி பாடத்தில் திறமைச்சித்தி பெற்றிருத்தல். அல்லது
தே. க. பொ. சா. பரீட்சையில் "ஏ" அல்லது "பீ" தரத்தில் சித்தி பெற்றிருத்தல், அல்லது
க. பொ. த. (உ. த. ) பரீடசையில் புவியியல், வரலாறு பொருளியல், அரசியல் ஆகிய பாடங்களில் ஆகக்குறைந்தபட்சம் இரண்டு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.

(கூ) இரண்டாம் மொழி (சிங்களம்/தமிழ்)

(i) இரண்டாம் மொழி (சிங்களம்/ தமிழ்) பாடநெறிக்கு நியமனம் பெற்றவர்கள் பந்தி 7 (1) இல் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பெற்றிருப்பின் இப்பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

8. பணிப்பாளரொருவரால் நிருவகிக்கப்படும் பாடசாலை யொன்றின் அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவொன்றில் கடமையாற்றும் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலையொன்றின் நிரந்தர ஆசிரிய குழுவொன்றில் கடமையாற்றும் சாதாரண வகுப்புகளில் 20 மணித்தியாலங்கள் கற்பிக்கும் ஆசிரியர்களிடமிருந்து வரையறுக்கப்பட்ட ஒரு தொகையினர் பயிற்சிக்காகத் தேர்ந்தெடுக்கப்படுவர்.

இது தொடர்பாகக் கீழ்க் குறிப்பிடப்படும் பாடசாலைகள் தனியார் பாடசாலைகளாகக் கொள்ளப்படும் :-

(i) 1951 ஆம் வருடம் கட்டணம் அறவிடும் பாடசாலைகளாக மதிக்கப்பட்ட உதவிபெறும் பாடசாலைகள்.
(ii) 1960.12.01 ஆந் திகதி கட்டணம் அறவிடாத தனியார் பாடசாலைகளென தீர்மானிக்கப்பட்ட பாடசாலைகள்.
(iii) கல்வி அமைச்சினால் (பிரதேச/ மாகாணக் கல்விப் பணிப்பாளர்களாலல்ல) அங்கீகரிக்கப்பட்ட தனியார் பாடசாலைகள்.

சகல தனியார் பாடசாலைகளிலும் கடமையாற்றும் விண்ணப்பதாரிகள் 2008.08.15 ஆந் திகதியன்று குறைந்த பட்சம் ஒருவருட காலம் இடைவிடாது சேவையாற்றுபவர் எனக் குறிப்பிடவேண்டும். அவர்களது முதல் நியமனக் கடிதமும், குறிப்பிட்ட ஆசிரியர் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர் குழுவில் உள்ளவர் என்பதையும் அத்தாட்சிப்படுத்திய ஒரு கடிதத்தினை உரிய மாகாண/வலயக் கல்விப் பணிப்பாளரிடமிருந்து பெற்று நேர்முகப் பரீடசையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

பிரிவெனாக்களிலிருந்து விண்ணப்பிக்கும் ஆசிரியர்கள் 2008.08.15 ஆந் திகதியன்று ஆகக் குறைந்தது இரண்டு வருடச் சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். 1959 பிரிவெனாச் சட்டம் அல்லது 1979 ஆம் வருட 64 ஆம் இலக்க சட்டத்தின்கீழ் அங்கீகரிக்கப்பட்ட சேவை இதற்காகக் கணக்கிடப்படும்.

தற்போது பிரிவெனாக்களிலிருந்து தோற்றும் ஆசிரியர்கள் சிங்களம், விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், பௌத்த சமயம் ஆகிய பாடநெறிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்கலாம். (நியமனம் பெற்ற பாடத்திற்கே பயிற்சி பெறல் வேண்டும்)

'வித்யாயதன' பிரிவெனாக்களில் கற்பிக்கும் அங்கீகரிக்கப்பட்ட ஆசிரியர்கள் இதற்கு மேலதிகமாக சங்கீதம், சித்திரம், நடனம், வர்த்தகம், உடற்கல்வி, விவசாயம் ஆகிய பாடநெறிகளுக்கு விண்ணப்பிக்கலாம்.

சகல தனியார் பாடசாலை ஆசிரியர்களும் முகாமையாளர் களிடமிருந்தும், பிரிவெனா ஆசிரியர்கள் நிருவாகிகளிடமிருந்தும் பின்வரும் விடயங்கள் தொடர்பாகப் பெற்றுக்கொண்ட ஆவணங்களை நேர்முகப் பரீட்சையின்போது சமர்ப்பித்தல் வேண்டும் :-

(i) பயிற்சிபெறும் காலத்தில் சேவையிலிருந்து ஆசிரியரை விடுவிக்க முடியும் என்பது பற்றியும்,

(ii) பயிற்சிக் காலத்தின் போது ஆசிரியருக்குச் சம்பளம் வழங்க முடியும் என்பது பற்றியும்,

(iii) பயிற்சி முடிவின் போது ஆசிரிய நிர்வாக சபையினால் குறிப்பிட்ட ஆசிரியரை மீண்டும் சேவையில் சேர்த்துக் கொள்ள முடியும் என்பது பற்றியும்,

(iv) பயிற்சிக்காகத் தெரிவு செய்யப்படும் பிரிவெனா ஆசிரியர்களுக்குப் பதிலாக வேறு ஆசிரியர்கள் கோரப்படுவதில்லை என்பது பற்றியும் அவரது வேலைகளை அனுமதிக்கப்பட்ட ஆசிரிய குழுவினருக்கிடையில் பகிர்ந்து கொடுப்பதாகவும் குறிப்பிடுதல்

தனியார் பாடசாலைகளில் இருந்தும், பிரிவெனாக்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்கள் பயிற்சிக்காகப் பதிவு செய்யப்படுவதற்கு முன்பு **'பயிற்சியின் பின்பு அரசாங்க பாடசாலைகளில் தொழில் கோருவதில்லை'** என்ற நிபந்தனைப் பத்திரத்தில் ஒப்பமிட வேண்டும்.

தனியார் பாடசாலைகளிலிருந்து தோற்றும் சகல ஆசிரியர்களும் மாகாணக் கல்விப் பணிப்பாளரால் கையொப்பமிடப்பட்ட முதல் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்தல் வேண்டும். 18 வயதுக்கு முன் நியமனம் பெற்ற ஆசிரியர்களின் நியமனத் திகதி அவர்களுக்கு 18 வருடம் பூர்த்தியான தினத்திலிருந்தே முதல் நியமனத் திகதியாகக் கணிக்கப்படும். இந்நியமனக் கடிதம் வேறொரு அதிகாரியினால் கையொப்பமிடப்பட்டிருப்பின் உரிய மாகாணக் கல்விப் பணிப்பாளரால் அது கையொப்பமிடப்பட்டு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

9. **தெரிவுக்காக விண்ணப்பித்தல்**.- (i) இந்த வர்த்தமானி அறிக்கையில் காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கமைய விண்ணப்பதாரியால் தயாரிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை பூர்த்தி செய்து அதன் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

(அ) பயிற்சி நெறியைப் பின்பற்றுவதற்கு எதிர்பார்க்கும் மொழியிலேயே விண்ணப்பித்தல் வேண்டும்.

(ஆ) விண்ணப்பம் 8"×12" அளவிலான தாளின் இரு பக்கங்களிலும் தயாரிக்கப்படல் வேண்டும்.

(இ) எந்தக் கூட்டினையும் மாற்றவோ நீக்கவோ முயற்சிக்கக் கூடாது. கோடுகளுக்கிடையில் இடைவெளி இருத்தல் வேண்டும். ஒன்றோடொன்று இணைந்திருக்கும் விதத்தில் தயாரித்தல் கூடாது.

(ii) விண்ணப்பதாரரால் விண்ணப்பப்படிவம் குறைவின்றியும் சரியாகவும் பூர்த்தி செய்யப்படவேண்டும். பூரணமற்ற விண்ணப்பம் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். கீழ்க் குறிப்பிடப்படும் அம்சங்களின்பால் விண்ணப்பதாரி களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது.

(அ) சகல விண்ணப்பதாரிகளும் தமது பெயரைத் திணைக்களத்தில் பதிவு செய்துள்ள பிரகாரமே குறிப்பிடுதல் வேண்டும்.

(ஆ) தமது பாடசாலை அதிபரூடாக விண்ணப்பித்தல் வேண்டும். பாடசாலை அதிபர் ஒருவர் விண்ணப்பிப்பதாயிருந்தால் கோட்ட/வலயக் கல்விக் காரியாலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஊடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

(இ) யாழ்ப்பாண மாவட்டத்தின் பயிற்றப்படாத ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் (ஆங்கிலம் உட்பட) அதிபர், ஆசிரிய கல்லூரி, கோப்பாய் என்ற முகவரிக்கும், தமிழ் மொழி மூலம் விண்ணப்பிக்கும் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்றப்படாத ஆசிரியர் களின் விண்ணப்பப் பத்திரங்கள் (ஆங்கிலம் தவிர்த்து) அதிபர், அரசினர் ஆசிரியர் கலாசாலை, மட்டக்களப்பு என்ற முகவரிக்கும் தமிழ்மொழி மூலம் விண்ணப்பிக்கும் மன்னார், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த பயிற்றப்படாத ஆசிரியர்களின் விண்ணப்பங்கள் (ஆங்கிலம் தவிர்த்து) பீடாதிபதி, தேசிய கல்விக் கல்லூரி, வவுனியா என்ற முகவரிக்கும் அனுப்பப்பட வேண்டும்.

(ஈ) மேற்குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டங்கள் தவிர, ஏனைய மாவட்டங்களில் உள்ள சகல தமிழ் மொழிமூல, சிங்கள மொழிமூல விண்ணப்பங்களும், (ஆங்கிலமும் உட்பட) மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், கிளி நொச்சி, வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த விண்ணப்பதாரிகளின் ஆங்கில பாட நெறிக்குரிய விண்ணப்பங்களும் **'பிரதம ஆணை யாளர்', ஆசிரிய கல்வி நிர்வாகக் கிளை, கல்வி அமைச்சு, இசுருபாய பத்தரமுல்ல** என்ற முகவரிக்கு அனுப்பப்படவேண்டும்.

(உ) சகல விண்ணப்பப் பத்திரங்களும் 2008.08.15 ஆந் திகதியில் அல்லது அதற்கு முன்பு கிடைக்கத்தக்கதாக பதிவுத் தபால் மூலம் உரிய முகவரிக்கு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பப் பத்திரம் அனுப்பப்படும் உறையின் இடப்பக்க மேல் மூலையில்

**ஆசிரிய பயிற்சிக்காகத் தெரிவு செய்தல் - 2009**

பாடநெறி :...........................
மொழி மூலம் : ..................... மாவட்டம் :.................
என்று குறிப்பிடவும்.

(ஊ) தாமதமாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப் படும். அத்துடன்,

(1) விண்ணப்பம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்பட மாட்டாது.

(2) விண்ணப்பத்தோடு ஆவணங்கள் எவற்றையும் இணைத்து அனுப்புதல் கூடாது.

(3) தகைமைகளைப் பரீட்சிப்பதற்காக நடைபெறும் நேர்முகப் பரீட்சையின் போது சகல சான்றிதழ் களினதும் மூலப் பிரதிகளும், போட்டோ பிரதிகளும் சமர்ப்பிப்பதற்குத் தயாராக இருத்தல் வேண்டும். போட்டோப் பிரதிகள் யாவும் உறுதிப்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும்.

நிமால் பண்டார,
செயலாளர்,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
"இசுருபாய",
பத்தரமுல்லை,
2008.06.13.

மாதிரி விண்ணப்பப்படிவம்

(8"× 12" அளவு கொண்ட தாளின் இருப்பக்கங்களையும் பயன்படுத்தவும்)

**கல்வி அமைச்சு**

ஆசிரிய கல்விப் பாடநெறியைத் தொடர்வதற்காக ஆசிரியர்களைத் தெரிவு செய்தல் - 2009

01. மொழி மூலம் :

02. முதல் நியமனக் கடிதத்திற்கமைவாக பாடசாலையில் கடமையேற்ற திகதி :

03. பாடநெறி :

04. முதல் நியமனத்தின் தன்மை (பாடம் குறிப்பிடவும்) :

05. நீங்கள் தொலைக் கல்விப் பாடநெறியில் பயிற்சி பெற்றிருப்பின்

(i) பாடநெறி

(ii) வருடம்

(iii) இறுதிப் பரீட்சையின் பெறுபேறு

06. முழுப் பெயர் : (கடைசிப் பெயர் முன்பாக) வண./திரு/திருமதி/ செல்வி :----.

07. உபயோகிக்கும் முறைப்படி முதலெழுத்துக்களுடன் பெயர் : வண./திரு./ திருமதி/செல்வி :----.

08. பால் :

09. அலுவலக முகவரி :

10. சேவையாற்றும் பாடசாலையின் வகை :----. (அரசினர்/பெருந்தோட்ட/பிரிவெனா/ அங்கீகரிக்கப்பட்ட தனியார்)

11. சொந்த முகவரி :----.

தனிப்பட்ட தொலைபேசி எண்/தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி எண் :

12. (i) பிறந்த திகதி :----.

(ii) 2008.08.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.

13. சேவையாற்றும் பாடசாலை அமைந்துள்ள

(i) மாவட்டம்

(ii) வலயக் கல்விக் காரியாலயம்

14. கல்வித் தகைமைகள் :

(i) க. பொ. த. (சா. த.) தே. க. பொ. த. ப. பரீட்சைப் பெறுபேறுகள் :

சுட்டிலக்கம் :----

வருடம் :----

| சித்தியடைந்த பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
|---|---|---|
| | முதலாம் முறை | இரண்டாம் முறை |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |
| 5. | | |
| 6. | | |
| 7. | | |
| 8. | | |

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சைப் பெறுபேறுகள் :

சுட்டிலக்கம் :----

வருடம் :----

| சித்தியடைந்த பாடங்கள் | பெற்றுள்ள தரங்கள் | |
|---|---|---|
| | முதலாம் முறை | இரண்டாம் முறை |
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

வேறு உரிய தகைமைகள் இருப்பின் குறிப்பிடவும்.

| நிறுவனம் | பாடம் | காலம் | பத்திரம் |
|---|---|---|---|
| | | | |

(iii) நீங்கள் கற்கவிருக்கும் பாடநெறி தொடர்பாக, மேலதிகத் தராதரப் பத்திரங்கள் இருப்பின் குறிப்பிடவும்.

1.5 சேவை விவரங்கள்

| சேவையாற்றிய பாடசாலை | சேவைக் காலம் | கஷ்ட பிரதேசம்/ இல்லையா என்ற விவரம் |
|---|---|---|
| | | |

இங்கு தரப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவை என்று உறுதிமொழிகிறேன். பிழையான தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக நிரூபிக்கப்பட்டால் பயிற்சி பெறும் காலத்தில் அது சம்பந்தமாகக் கல்வி அமைச்சின் செயலாளரால் எடுக்கப்படும் தீர்மானத்தை ஏற்றுக் கொள்கிறேன். பாடசாலையின் ஆசிரியர், மாணவ எண்ணிக்கைப் படியும், சேவையின் தேவைக்கேற்பவும் என்னைத் தெரிவு செய்தல்

அல்லது தெரிவு செய்யாதிருத்தல் பற்றித் தீர்மானிக்கப்படும் என்பதையும் நான் அறிவேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

ஆசிரியராயின் அதிபராலும், அதிபராயின் வலயப் பொறுப்பாளரான கல்விப் பணிப்பாளராலும் பின்வரும் பகுதி பூர்த்தி செய்யப்படல் வேண்டும் :-

(i) தற்போது ஆசிரியர் குழுவிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை :----.
(ii) மாணவ எண்ணிக்கை :----.
(iii) விண்ணபதாரர் பயிற்சிக்காக விடுவிக்கப்படின் மாணவ எண்ணிக்கைப்படி பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை போதுமானதா? :-----.

விண்ணப்பதாரி எனது பாடசாலையில்/வலயத்தில், ஆசிரியர்/பாடசாலை அதிபர், அவர் .................... ஆந் திகதி தொடக்கம், முதல் நியமனத்திற்கமைய ....................... ஆந் திகதி முதல் கடமையேற்றுள்ளார் என்பதையும், ....................... ஆந் திகதி தொடக்கம் .............. பாடசாலையில் கடமையாற்றுபவர் என்பதையும், இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் என்னால் பரீட்சிக்கப்பட்டனவென்றும், அவை உண்மையானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன்.

------,
அதிபர்/வலயக் கல்விப் பணிப்பாளரின் கையொப்பம்.

அலுவலக முத்திரை :

திகதி :----.

7-285

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.